Registered as Newspaper

பாதுகாப்பான சூழலில்
ரெலிபோன் மூலம்
ரெலிகுளோப்

இரவு பகல்
24 மணி நேர சேவை
ரெலி: 25088
(6 தொடர்புகள்)
ஆர் ஜி கட்டடம்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை ரூ.1/-

ரெலெக்ஸ்
ரெலிபோன்
சேவையில்

நம்பிக்கையானவர்கள்
நல்லவர்கள் — வல்லவர்கள்
ரெலிகுளோப்!

ஆர். ஜி. கட்டடம்
ஸ்ரான்லி வீதி,
யாழ்நகர்.

[illegible] யாழ்ப்பாணம் அக்ஷய ௵ ஆனி ௴ 17 ௳ செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1406 ஷவ்வா பிறை 22 (01 07 1986) UTHAYAN [illegible] TAMIL DAILY கதிர்- 192

இன்று முதல்

பெற்றோல் பெர்மிட்

பலாலி முகாமில்

ஆனையிறவைத் தாண்டிப்போக வாகனங்களுக்கு 'பாஸ்' தேவை

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிபொருள் விற்பனையாளருக்கு உரிய பெர்மிட் இன்று (ஜூலை முதலாம் திகதி) தொடக்கம், வடபகுதி இணைப்பதிகாரியினால் வழங்கப்படும் பெர்மிட் பெறுவதற்குப் பலாலி முகாமுக்குச் செல்ல வேண்டும்.

அதே வேளை, ஆனையிறவுக்கு அப்பால் செல்லும் வான்கள், லொறிகள், தனியார் பஸ்கள் யாவும் பலாலி முகாமுக்குச் சென்று விசேஷ "பாஸ்" பெற்றே செல்ல வேண்டும். அந்த நடைமுறையும் இன்று அமுலுக்கு வருகிறது.

இதுவரையும் பெற்றோல் மற்றும் எரிபொருள் பெர்மிட் யாழ். அரசாங்க அதிபர்களினால் வழங்கப்பட்டு வந்தது.

விசேஷ அங்கீகாரம் பெற்ற சுமார் 27 எரிபொருள் விற்பனையாளர்கள் இப்போது யாழ் மாவட்டத்தில் உள்ளனர்.

அவர்களுக்கு மாதாந்தம் ஒவ்வொருவருக்கும் சராசரி 27,000 லீட்டர் எரிபொருள் கொண்டு வர பெர்மிட் வழங்கப்பட்டு வந்தது. விசேஷ அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர்களில் பலர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களாகும்.

இதேவேளை ஆனையிறவுக்கு அப்பால் செல்லும் சகல வாகனங்களும் பலாலி முகாமுக்குச் சென்று 'பாஸ்' பெற்றே செல்லவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இ. பி. போ. சபை பஸ்களுக்கான "பாஸ்"கள் மட்டும் கோட்டை இராணுவ முகாமில் வழங்கப்படும். (இ)

போக்குவரத்து செய்ய முடியாத நிலையில் பாலம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

கோப்பாய் — கைதடி பாலம் மீண்டும் சேதம் அடைந்துள்ளது.

நேற்று ஹெலிக்கொப்டரில் இருந்து வீசப்பட்ட குண்டினாலேயே பாலம் சேதம் அடைந்தது.

இதனால் இப்பாதையூ [illegible]

(4 ஆம் பக்கம் பார்க்க)

யாழ் நகரில் ஏற்பட்ட திடீர் பதற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

நேற்று யாழ் கோட்டையிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

இதனால் நகரம் சில நிமிட நேரம் பதற்றம் அடைந்தது.

நேற்றுக்காலை 10 மணி அளவில் கோட்டை இராணுவ முகாமில் இருந்து திடீரென துப்பாக்கிப் பிரயோகம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மசகுகிமுரளி



தென் ஆபிரிக்காவுக்கு மேலை பொருளாதாரத் தடை விதிக்கச் சொல்லி ஆபிரிக்க நாடுகள் கேட்டுக் கொண்டிருக்கினம். இஞ்சை கேட்டுக் கேள்வி இல்லாமலே வடக்குக்கு மேலை மறைமுகமான பொருளாதாரத் தடையள் வந்து கொண்டு இருக்குது எண்டு சொல்லுங்கோ பின்னை...!

பருத்தித்துறை

பீரங்கித் தாக்குதலில்

5பேர் பலி; 9பேர் காயம்

$6\frac{1}{2}$ மணி நேரமாகக் குண்டுமாரி

— பருத்தித்துறைச் செய்தியாளர், பி. ஆர். நாதன் —

பருத்தித்துறை, ஜூலை 1

பருத்தித்துறைப் பகுதியில் நேற்று முற்பகல் தொடக்கம் மாலை வரை ஆறு மணி நேரமாகத் தொடர்ச்சியாகப் பீரங்கித் தாக்குதலும், ஷெல் தாக்குதலும் நடைபெற்றன.

அவற்றின் விளைவாக ஐந்துபேர் உயிரிழந்தனர். ஒன்பது பேர் காயமுற்றனர்.

நேற்று முற்பகல் 10 30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தொடர்ந்து இத் தாக்குதல்கள் இடம்பெற்றன.

பருத்தித்துறை கடற்கரையிலிருந்தும், வல்வெட்டித்துறை, பொலிகண்டிப் பகுதிகளிலிருந்தும் பீரங்கிக் கப்பல்கள் தொடர்ந்து குண்டுத் தாக்குதல்களை நடத்தின.

அதனால் தம்பாட்டி, சாளம்பை, வண்ணாந்துறை ஆகிய பகுதி மக்கள் தமது குடியிருப்புகளை விட்டு இடம் பெயர்ந்தனர்.

நேற்றுப் பாடசாலைகள் யாவும் முற்பகல் 11 30 மணியுடன் மூடப்பட்டன. பருத்தித்துறை தற்காலிக சந்தையும் முற்பகல் 10 30 மணியுடன் கலைந்துவிட்டது.

இறந்தவர்களின் விவரம் வருமாறு:-

1 எஸ் ரகு வயது 20 தம்பசெட்டி, 2 எம் ராம் வயது 22 வண்ணாந்துறை, 3 ரீ. சிவக்கொழுந்து வயது 50 சாளம்பை, 4. செல்வி எஸ்.

(4-ம் பக்கம் பார்க்க)

வவுனியா குண்டு வெடிப்பில் ஐவர் பலி

யாழ்ப்பாணம், ஜூலை 1

வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகில் கல்வெட்டு ஒன்றின் கீழ் வைக்கப்பட்ட குண்டு ஒன்று வெடித்ததில் 5 பேர் உயிரிழந்தனர்

19 பேர் காயமடைந்தனர்.

இறந்தவர்களில் நாலு பேர் சிங்களவர். ஒருவர் தமிழர்.

காயமடைந்தவர்களில் 10 பேர் சிங்களவர் 6 பேர் தமிழர் 3 பேர் முஸ்லிம்கள்

3 வாகனங்களும் இக் குண்டு விபத்தில் சேதமடைந்து விட்டன (இ-எ-2)

தொண்டமானாறு பகுதியிலும்..,

சரவெட்டி, ஜூலை 1

தொண்டமானாற்றில் நேற்று மீண்டும் தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன

நேற்று பகல் 11 மணி அளவில் தொண்டமானாற்றில் உள்ள முகா

(4 ஆம் பக்கம் பார்க்க)

கோப்பாய் -- கைதடி பாலத்தில்

ஹெலிக்கொப்டர் தாக்குதல்

புளொட்போராளி உட்பட இருவர்பலி

யாழ்ப்பாணம் ஜூலை 1

கோப்பாய் - கைதடி பாலத்தில் நேற்று ஹெலிக்கொப்டர் தாக்குதல் நடத்தப்பட்டது

"புளொட்" போராளி ஒருவரும், பாடசாலை மாணவன் ஒருவனும் அந்த இடத்திலேயே பலியானார்கள்

ஜீப் ஒன்றும் எரிந்து நாசமானது

சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது;

நேற்றுப் பிற்பகல் 2 45 மணி அளவில் கைதடி - கோப்பாய் பாலத்தில் போராளிகளின் ஜீப் ஒன்று சென்று கொண்டிருந்தது

அந்த ஜீப்பில் 11 "புளொட்" போராளிகள் பயணம் செய்து கொண்டிருந்தனர்.

அப்பொழுது அதிசயரத்தில் பறந்துகொண்டிருந்த ஹெலிக்கொப்டர் ஒன்று இந்த ஜீப்பைக் கண்டது.

உடனே மிகத் தாழப் பறந்து வந்த அந்த ஹெலிக்கொப்டர் திடீரென ஜீப் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது

இதனால் ஜீப்பில் இருந்த போராளிகள் வெளியே குதித்து பாலத்தினுள் பதுங்கிக் கொண்டனர்

ஹெலிக்கொப்டரை நோக்கி போராளி ஒருவர் தாக்குதல் நடத்தினார்.

இதே வேளை ஹெலிக்கொப்டரில் இருந்து குண்டு ஒன்று வீசப்பட்டது

இதனால் ஜீப் எரிந்து நாசமானது.

ஹெலிக்கொப்டரை எதிர்த்து தாக்குதல்நடத்திய போராளியும் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இதேநேரம் வீதியால் சென்று கொண்டிருந்த பாடசாலை மாணவன் ஒருவனும் அந்த இடத்திலேயே பலியானார்.

இதே வேளை ஹெலிக்கொப்டர் கோப்பாய் - கைதடி பாலத்தில் தரையிறக்கப்பட்டது. அதில் இருந்து ஐந்து சிப்பாய்கள் இறங்கினர்

அப்போது விடுதலைப் புலிகள் சம்பவம் நடந்த இடத்தில் திடீர் தாக்குதலை நடத்தினர். அதன் பின்னர் அவசர அவசரமாக சிப்பாய்களை ஏற்றிக் கொண்டு ஹெலிக்கொப்டர் பறந்து சென்றது

ஏனைய புளொட் போராளிகள் உயிர் தப்பினர் விடுதலைப் புலிகளின் தாக்குதலினாலேயே அவர்கள் தப்ப முடிந்தது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-10)

புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலால் புளொட்போராளிகள் தப்பினர்

யாழ்ப்பாணம், ஜூலை 1

கோப்பாய் - கைதடி பாலத்தில் நேற்று நடந்தசம்பவத்தில் புளொட் போராளியான பார்த்தீபன் (பார்த்தி) (பண்டத்தரிப்பு) மரணம் அடைந்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய எதிர்த் தாக்குதலால் ஏனைய புளொட் போராளிகள் காப்பாற்றப்பட்டனர்.

இது தொடர்பாக புளொட் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு;

நேற்று கோப்பாய் - கைதடி பாலத்தில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த தோழருக்கு எமது வீர அஞ்சலிகள்.

மேற்படி சம்பவம் பிற்பகல் 2-45 மணியளவில் நடைபெற்றது ஹெலிக்கொப்டரில் இருந்து சரமாரியான வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட வேளையி

(4 ஆம் பக்கம் பார்க்க)

திருமலை : கைதானோர் பாதுகாப்பாக உள்ளனர்

என ஒலிபெருக்கியில் அறிவிப்பு

திருகோணமலை, ஜூலை 1

திருகோணமலை நகரில் கைது செய்யப்பட்டவர்கள் பாதுகாப்பாக பத்திரமாக இருக்கிறார்கள். அஞ்சவேண்டாம்.

இப்படி ஆயுதப்படையினர் ஞாயிறு மாலை ஒலிபெருக்கி மூலம் தமிழ் - சிங்கள மொழிகளில் பகிரங்கமாக அறிவித்தனர்.

வாகனம் ஒன்றில் இப்படி ஆயுதப் படையினர் அறிவித்துக்கொண்டு சென்றனர்.

இதனிடையில பூஸா கொண்டு போகப்பட்ட 497 பேருக்கும் தேவையான துணிமணிகளை உறவினர்களிடம் இருந்து சேகரித்து அனுப்புவதில் திருமலைப் பிரசைகள் குழு ஈடுபட்டுள்ளது

கப்பலில் கொண்டு போகப்பட்டு, மீண்டும் கொண்டுவரப்பட்டு கடற்படைத் தள முகாமில் தங்கி வைக்கப்பட்ட 497 பேரும் பூஸாவுக்கு ஞாயிறு பகல் கொண்டு செல்லப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் பற்றிப் பாதுகாப்பு வட்டாரம் தந்த

(4.ஆம்பக்கம் பார்க்க)

நிலக்கண்ணி தாக்குதல் 10 பேர் இறந்தனர்

புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1

திருமலை மாவட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் நடத்தப்பட்ட நிலக் கண்ணி வெடித் தாக்குதலில் பத்துப்பேர் அதே இடத்தில் மரணம் அடைந்தனர்

கடந்த 27 ஆம் திகதி நடந்த இச் சம்பவம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

திருமலைஊழியர்கப்பல் நேரம் மாற்றம்

யாழ்ப்பாணம் ஜூலை 1

திருமலை செல்லவிருந்த அரசஊழியருக்கான கப்பல் நேரம்மாற்றம் செய்யப்பட்டுள்ளது

இன்று 12-30 மணிக்கு புறப்படும் என்று அறிவிக்கப்பட்ட கப்பல் நேரமே, மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

திருமலை செல்வதற்கு மொத்தம் 98 பேர் தம்மைப் பதிவு செய்துள்ளனர்.

கப்பல் செல்லும் நேரம், மற்றும் ஒழுங்குகள் குறித்து இன்று அறிவிக்கப்படும். (இ-5

பாலைதீவுக் கரையில் உருக்குலைந்த சடலம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

பாலைதீவுக் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று நேற்றுக் கண்டு பிடிக்கப்பட்டது.

இச்சடலத்தின் இடுப்பில் இரண்டு அட்சரக் கூடுகள் இருந்தன என்றும் நீலநிறபெனியனும் நீலநிற அரைக்காற்சட்டையும் அணிந்திருந்த

(4-ஆம் பக்கம் பார்க்க)

இலங்கை அரசின் புது யோசனைகள்!

போராளிகள் கருத்து

வெள்ளியன்று எம்- ஜி- ஆரிடம்

சென்னை, ஜூன் 30

இலங்கை அரசின் யோசனைகள் பற்றித் தங்கள் திட்டவட்டமான இறுதியான கருத்துக்களை தமிழ்ப்போராளி அமைப்புக்கள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை தமிழக முதலமைச்சரிடம் தெரிவிக்கும்

அதன் பின்னர் இந்திய அதிகாரிகள் அழைத்தால் போராளி அமைப்புக்களின் பிரதிநிதிகள் பேச்சுக்கள் நடத்த புதுடில்லி செல்வர்

இலங்கையின் யோசனைகள் பற்றி தமிழர் அமைப்புக்களிடையே பொது நிலைப்பாட்டை உருவாக்க ஈழம் தேசிய விடுதலை முன்னணி நடவடிக்கை எடுத்துள்ளது

இந்த நிலைப்பாட்டை உருவாக்க கூடியதான பேச்சுக்களை நடத்தவரும்படி ஈழம் தேசிய விடுதலை முன்னணி, ஏனைய அமைப்புகளுக்கான தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் ஆகியவற்றை அழைத்துள்ளது.

ஒரு வாரத்தில் பொது நிலைப்பாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று ஈழம் தேசிய விடுதலை முன்னணி கருத்து வெளியிட்டுள்ளது.

ஈழம் தேசிய விடுதலை முன்னணியில் தற்சமயம் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப் புரட்சி அமைப்பு, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் ஆகியவை அங்கம் வகிக்கின்றன

(இ-47)

வயாவிளானிலும் சிலுவை ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வயாவிளான் தோலகட்டி ஆச்சிரமத் துறவி அருட் சகோதரர் வண. இமானுவேல் வென்செஸ்லாஸ் அடிகளாரின் கொலையைக் கண்டித்து அப்பகுதி மக்களாலும் சிலுவை ஊர்வலம் ஒன்று நடத்தப்பட உள்ளது.

எதிர்வரும் சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு வயாவிளான் சந்தி யோகுமையோர் ஆலயத்தில் ஆரம்பமாகும் ஊர்வலம் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் முடிவடையும் (இ-5)

சுபநேரம்

01 —7—1986

செவ்வாய்க்கிழமை

சுபநேரம்:-

10 26 முதல் 11 56வரை

ராகுகாலம்:-

2 56 முதல் 4 26 வரை

இவை பஞ்சாங்கம் இலவசப் பொருந்தும்

மத்திய போக்குவரத்து சபை கலைப்பு

கொழும்பு, ஜூலை 1

ஆகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் மத்திய போக்குவரத்துச் சபை கலைக்கப்படும்

தற்போது உள்ள பிராந்திய போக்குவரத்துச் சபைகள் சுயமாக இயங்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம் எச். முகம்மது இதனை நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

(இ)

பகிரங்கமாக கருத்து தெரிவிக்க வேண்டாம் என்று கோரிக்கை

சென்னை, ஜூன் 30

இலங்கை அரசின் யோசனைகள் பற்றி திருப்தி தெரிவிக்கும் கருத்துக்களையோ, அதிருப்தி தெரிவிக்கும் கருத்துக்களையோ பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டாம் என்று தமிழர் அமைப்புக்கள் கோரப்பட்டுள்ளன.

இந்திய அரச அதிகாரிகள் இக் கோரிக்கையை அமைப்புக்களின் தலைவர்களுக்கு விடுத்துள்ளனர்

கூட்டணித் தலைவர்களுக்கு புதுடில்லியில் வைத்து இக் கோரிக்கை விடுக்கப்பட்டது

போராளிகளுக்கு தமிழ் நாடு முதலமைச்சரின் இல்லத்தில் கடந்த ஞாயிறு இடம்பெற்ற சந்திப்பின் போது இந்த ஆலோசனை வழங்கப்பட்டது

முதலமைச்சரிடம் இருந்து இலங்கை அரசின் யோசனைகளைப் பெற்றுக்கொண்ட போராளிக் குழுத் தலைவர்கள் வருமாறு:

1. திரு வே. பிரபாகரன், (தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம்)
2. திரு உமா மகேசுவரன் (தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்)
3. திரு பத்மநாபா (ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி)
4. திரு செல்வம் (தமிழ் ஈழ விடுதலை இயக்கம்)
5. திரு பாலகுமார் (ஈழப் புரட்சி அமைப்பு)

போராளிகளின் தலைவர்கள் — முதலமைச்சர் சந்திப்பு சுமார் 30 நிமிடங்கள் நீடித்தன

இலங்கையில் நிலவும் நிலைமை குறித்தும் இச் சந்திப்பின் போது ஆராயப்பட்டன. (இ-எ-2)

இளைய தலைமுறையின் [illegible] வரும் இன்றைய நாளிதழ்

தென் இலங்கை கத்தோலிக்கர் இன ரீதியில் இயங்குகின்றனர்

தோலகட்டி வென்செஸ்லாஸ் அஞ்சலிக் கூட்டத்தில் உரை

பருத்தித்துறை, ஜூலை 1

தென் இலங்கை கத்தோலிக்கர்கள் இன ரீதியில் செயற்படுகின்றனர்.

இலங்கையில் வட பகுதியிலுள்ள தமிழ்க் கத்தோலிக்கர்கள் அரச இராணுவத்தினால் தொடர்ந்தும் துன்புறுத்தப்படுவதற்கு எதிராக உலக நாடுகளின் கத்தோலிக்கர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். வென்செஸ்லாஸ் அடிகளாரின் அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய பருத்தித்துறை முன்னாள் நகரசபை உறுப்பினர் திரு வின்சன் டீ போல் இவ்வாறு கூறினார்.

இவ் அஞ்சலிக் கூட்டத்திற்கு திரு ஆர். ஈ. ஆனந்தராசா தலைமை வகித்தார்.

திரு வின்சன் டீ போல் தொடர்ந்து உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது;

மன்னாரில் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட அருட் திரு பஸ்தியான் அடிகளாரின் மரணம் தொடர்பாக நீதிவிசாரணை மேற்கொள்ளும்படி கோரிக்கைவிடப்பட்டும் அரசு இதுவரை எவ்வித விசாரணையும் வைக்கவில்லை.

தென் இலங்கையிலுள்ள கத்தோலிக்க மதத்தினர் இன ரீதியாகப் பாகுபாடு காட்டி வட இலங்கையிலுள்ள கத்தோலிக்க மதத்தினரைப் புறக்கணித்து வருவது கவலைக்குரியது.

இப்படி அவர் கூறினார்.

அடுத்து உரையாற்றிய கரவெட்டி பங்குத் தந்தை அருட் திரு. சகாயநாயகம் அடிகளார் கூறியதாவது:

தமிழ் மக்கள் மத்தியில் ஒருமைப்பாடு பொதுநலம், அன்பு, சமாதானம், நீதி என்பன வலுவடைய வேண்டும்.

அப்போது தான் இருண்ட தமிழ் மக்களின் இன்றைய நிலைக்கு விமோசனம் கிடைக்கும்.

தோலகட்டி ஆச்சிரமத்தில் வெளித்தொடர்பு இன்றி தியானம் செய்து கொண்டிருந்த அடிகளார் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானது பெருங் கவலைக்குரியது.

நாம் மரணங்களைக் கண்டு பயந்து விடக்கூடாது. மரணங்களை விடுதலைக்கு உந்து சக்தி ஆகும்.

இப்படி அவர் கூறினார்.

அடுத்து உரையாற்றிய ஆசிரியர் சிவா கிருஷ்ணமூர்த்தி தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் தனியே போராளிகளுக்குத்தான் உரியது என்ற எண்ணத்தில் செயற்படக்கூடாது. சகல பொதுமக்களும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும் என்றார். (இ-118)

ஆஸ்பிரின் ஏற்படுத்தும் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 1

ஆஸ்பிரின் குளிசைகளை 12 வயதுக்குட்பட்டவர்கள் டாக்டர்களின் ஆலோசனை இன்றி பாவிக்கக்கூடாது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

12 வயதுக்கு உட்பட்டோர் இக்குளிசையை பாவிப்பதால் மூளை, ஈரல், குடல் போன்றவற்றில் பெரும் பாதிப்பு ஏற்படலாம் என்று வைத்திய அதிகாரிகள் அமைச்சுக்கு தெரிவித்துள்ளனர். (இ-10)

மருந்து கலவையாளர் பற்றுக்குறை நீங்கியது

புதிதாக 17 பேர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள அரசு வைத்தியசாலைகளில் நீண்ட காலமாக நிலவிவந்த மருந்துக் கலவையாளர்களுக்கான பற்றுக்குறை நீக்கப்பட்டுவிட்டது.

புதிதாக 17 பேர் மருந்துக் கலவையாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 13 பேர் யாழ் வேலை வங்கி ஊடாகவும் 4 பேர் யாழ் சுகாதாரத் திணைக்கள ஊழியர்களில் இருந்தும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டு விட்டன.

இவர்களுக்கான 6 மாத காலப் பயிற்சி வகுப்பு இன்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஆரம்பமாகின்றது.

இது தொடர்பான கடிதங்கள் சம்பந்தப்பட்ட மருந்துக் கலவையாளர்களுக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

இக்கடிதங்கள் கிடைக்கப் பெறாவிட்டால் உடனடியாக யாழ் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்துடன் நேரில் தொடர்பு கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருந்துக் கலவையாளர் பற்றுக்குறையை நீக்க நடவடிக்கை எடுத்தமைக்காக யாழ் பிரதேச சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் என் கனகசபைக்கு அரச மருந்துக் கலவையாளர்கள் சங்க யாழ் பிரதேசக்கிளை நன்றியும் பாராட்டும் தெரிவித்துள்ளது.

இத்தகவலை கிளைச் செயலாளர் திரு என். எம். கந்தசாமி தெரிவித்தார். (உ-எ)

பிரயாண ஒழுங்குகள்

● கனடா
● ஜேர்மனி
● பிரான்ஸ்
● டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், விசா, பொண்ட் (Bond)
ரிக்கட் ஆவணங்களும்
செய்து கொடுக்கப்படும்.

டென்மார்க் — கனடா
ஆகிய இடங்களுக்கு கொழும்பிலிருந்து நேரடிப் பயண ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதால் எம்முடன் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

INTERSUN GROUP
சின்னத்தம்பி அவெனியூ,
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.

நாடாளுமன்ற குழு ஆராயும்

கொழும்பு, ஜூலை 1

அரசாங்க நாடாளுமன்றக் குழு ஜூலை முதல் வாரத்தில் கூடி அரசின் மாகாண சபை யோசனைகளை ஆராயும்.

இந்த யோசனைகள் பற்றி அரசாங்க எம்.பி.கள் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்க இக் கூட்டத்தில் சந்தர்ப்பமளிக்கப்படும்.

அரசின் மாகாண சபை த்திட்டம் பற்றி ஜனாதிபதி விளக்கிச் சொல்வதுடன் அத்திட்டம் அமுல் நடத்தப்படும் விதம் பற்றியும் எடுத்துரைப்பார் என்று அரசு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

நீதிவான் பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வேலைக்காரச் சிறுமி இராணியின் மரணம் சம்பவித்த இடத்தை யாழ்ப்பாண நீதிவான் திரு. கே பி. எஸ் வரதராசா நேரில் சென்று பார்வையிட்டார்

எஜமானர்களின் நலனைக் கண்காணிக்கும் சட்டத்தரணிகள், திரு. இராஜாவிஸ்வநாதன் திரு எஸ் சிவலோகநாதன் ஆகியோரும், பொலீஸ் உத்தியோகத்தர் திரு கே. தனபாலசிங்கம், கிராம சேவகர், மரணமடைந்த வேலைக்காரச் சிறுமியின் தந்தை ஆகியோரும் அப்போது பிரசன்னமாயிருந்தனர். (இ 9)

சரணடைந்த தென் கொரிய சாரதி

கொழும்பு. ஜூலை 1

பத்தாயிரம் அமெரிக்க டாலரை எடுத்துக் கொண்டு பேஜோ காரில் தலைமறைவான கொழும்பில் உள்ள தென் கொரியத் தூதரக சாரதி, கடந்த வாரம் சரணடைந்தார்.

ஜூன் 7 ஆம் திகதி சோய் என்ற பெயருடைய இவர் தலைமறைவானார்.

ஜூன் 10 ஆம் திகதி திருகோணமலையில் உள்ள கராஜ் ஒன்றில் கார் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் சாரதியைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

சாரதி ஜூன் 25 இல் தென் கொரியத் தூதரகத்தில் சரண் அடைந்தார்

அவரைத் தூதரக அதிகாரிகள் தென் கொரியாவுக்கு நேற்று பாதுகாப்புடன் விமானத்தில் அனுப்பிவைத்தனர். (இ-எ-2)

நயினை ஆலயத்தில் அபிராமி அந்தாதி நாளையுடன் பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை 1

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் பங்குனிமாதம் 17 ஆம் திகதி படிக்கத் தொடங்கிய அபிராமி அந்தாதி நாளை புதன்கிழமை 2ஆம் திகதி முடிவுறும்.

அண்மையில் நயினாதீவுப் பகுதியில் உள்ள வீடுகளிலும் பிரசித்தி பெற்ற நயினை ஆலயத்திலும் சீருடையினர் நடத்திய அட்டூழிய[illegible] அடுத்தே இந்த அபிராமி அந்தாதி படிக்கப்பட்டு வருகிறது.

சித்தாராம் சாஸ்திரியாரின் வேண்டுகோளுக்கிணங்க தொடர்ந்து 108 நாட்களுக்கு மதியாபரணம் என்பவர் இந்த அந்தாதியை படித்து வருகிறார்.

இறுதி நாளான நாளை புதன்கிழமை நயினை அம்பாளுக்கு தேன் நெய் வேத்தியம் செய்து பாலாபிஷேகமும் செய்யப்படும்.

[illegible] 108 [illegible] வரை தொடர்ந்து அபிராமி அந்தாதி படித்து வரும் மதியாபரணம் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவார். (இ-10)

விசுவலிங்கம் ஐயாவின் சேவைக்கு புகழாரம்

தாவடி அஞ்சலிக் கூட்டத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 1

நாம் இந்த உலகில் ஒரு சிறு துளி என்ற உணர்வுடன் சேவை செய்யவேண்டும் இந்த உணர்வுடன் சேவைசெய்தால் புகழ், பெருமை போன்ற போலி உணர்வுகளுக்கு இடமில்லை

இந்த உணர்வுடன் தான் அமரர் விசுவலிங்கம் சேவையாற்றினர்.

இப்படி தாவடி பிரசைகள் குழுத் தலைவர் திரு எஸ் ஆர் சரவணபவன் சொன்னார்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவராக இருந்து மறைந்த திரு விசுவலிங்கத்துக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் தாவடியில் உள்ள பொது ஸ்தாபனங்கள் இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தன

விளையாட்டுக் கழகத் தலைவர் திரு கே. கே. ஜெகநாதன் தலைமை வகித்தார்.

கஷ்டப்பட்டவர்கள், பணக்காரர் என்ற பேதம் இன்றி திரு விசுவலிங்கம் சேவை புரிந்தார்

இக் கூட்டத்தில் சகல நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர்.

சகல சங்கங்களும் கூட்டாக திரு விசுவலிங்கத்தின் குடும்பத்தினருக்கு அனுதாபத் தீர்மானம் ஒன்றை அனுப்பின (உ-எ)

புலோலி கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூ 44 ஆயிரம் லாபம்

பருத்தித்துறை, ஜூலை 1

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1984-1985 ஆம் நிதியாண்டில் 44 ஆயிரத்து எழுநூறு ரூபா நிகரலாபம் அடைந்துள்ளது

சங்கத்தின் எட்டாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் திரு க. நடராசாவின் தலைமையில் கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை சங்கப் பணிமனையில் நடைபெற்றது.

அப்போது வருடாந்தக் கணக்காய்வு அறிக்கை பொதுசபைப் பிரதிநிதிகளால் ஆராயப்பட்டது

சங்க ஊழியர்களுக்கு இலாபத்திலிருந்து 4 ஆயிரத்து அறுநூற்று ஐம்பத்தைந்து ரூபா போனஸாக வழங்க அனுமதிக்கப்பட்டது.

மேலும் சங்க நிதியிலிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி நிதிக்கு ரூபா 5 ஆயிரம் நன்கொடை வழங்குவதற்கும் பொதுச்சபை தீர்மானித்தது. (உ-118)

அலங்கார உற்சவாரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 1

வண்ணார்பண்ணை வடகிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை புதன் கிழமை ஆரம்பமாகின்றது

13 ஆம் திகதி திருவூஞ்சலும் [illegible] தரிசனமும் நடைபெற்று மறுநாள் பிராயச்சித்த அபிஷேகத்துடன் உற்சவங்கள் பூர்த்தியடையும். (உ-ஒ)

உற்சவம்

பருத்தித்துறை ஜூலை 1

அல்வாய் அருள்மிகு வேவிலந்தை முத்துமாரி அம்பாள் தேவஸ்தான கொடியேற்ற உற்சவம் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை காலை ஆரம்பமாகின்றது.

20 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் ஆடிப் பூரணையன்று தீர்த்தோற்சவமும் நடைபெறும். (உ-118)

காத்தவராயன் நாடகத்தை அச்சிட ரூ. 26 ஆயிரம் நிதிஉதவி

யாழ்ப்பாணம், ஜூலை 1

காத்தவராயன் நாடகக் கையெழுத்துப் பிரதியை அச்சிடுவதற்கு யாழ் மாவட்ட கலாசார ஆலோசனைக் குழு தீர்மானித்து உள்ளது

இதற்கான செலவுக்கு 26 ஆயிரம் ரூபா நிதியை ஜூலை 1986 இல் ஒதுக்கியுள்ளது.

கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டு பிரசுர அங்கீகாரம் வழங்க மூவர் கொண்ட உபகுழு யாழ் அரச அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளது

பேராசிரியரும் துணைவேந்தருமான சு. வித்தியானந்தன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி எஸ் மௌனகுரு ஆகியோர் உபகுழு உறுப்பினர்கள் ஆவர்.

காத்தவராயன் நாடகக் கையெழுத்துப் பிரதி முன்னொரு போதும் அச்சேறவில்லை என்றும் — மிகுந்த சிரமத்துடன் இப்பிரதி சேகரிக்கப்பட்டதாகவும் — கலாநிதி இ. பாலசுந்தரம் ஆலோசனைக் கூட்டத்தில் இத்திட்டத்தைச் சமர்ப்பித்துப் பேசுகையில் குறிப்பிட்டார். (உ-எ)

அடுக்கு மாடிக் கடைத் தொகுதி

யாழ்ப்பாணம், ஜூலை 1

யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம் தனக்குரிய காணியில் ஒரு பகுதியை விற்று ஏனைய பகுதியில் அடுக்கு மாடிக் கடைத் தொகுதியை அமைப்பது பற்றி ஆலோசிக்கிறது.

இந்த விடயம் யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தில் மேலும் ஆராயப்படும்.

நல்லூர் திருஞானசம்பந்த ஆதீனத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை இப்பொதுக்கூட்டம் நடைபெறும்; சங்கப் பொதுச் செயலாளர் திரு. இ. வசந்தசேனன் இதற்கான அறிவித்தலை அங்கத்தவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். (உ-9)

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

கஷ்டங்களிலிருந்து யுவதிகளை காப்பாற்ற தையல் பயிற்சி உதவும்

திறப்பு விழாவில் உரை

வட்டுக்கோட்டை, ஜூலை 1

தையல் பயிற்சி யுவதிகள் அனைவருக்கும் இன்றியமையாத ஒன்றாகக் கொள்ளப்படுகிறது யுவதிகள் எதிர்காலத்தில் தமது குடும்பங்களை கஷ்டங்களிலிருந்து காப்பாற்றுவதற்கு இந்தப் பயிற்சி பேருதவி புரிகின்றது.

பண்டத்தரிப்பு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க அரசாங்க தையற் பயிற்சி நிலையத் திறப்பு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய வட்டுக்கோட்டைத் தொகுதி தொழில் பொறுப்பதிகாரி திரு ச. சிவசுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

கிராமங்களிலுள்ள கஷ்டப்பட்ட வேலையற்ற யுவதிகளின் எதிர்கால நன்மை கருதியே கிராமங்கள் தோறும் இப்பயிற்சி தொழில் திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வருகின்றது.

இப்பயிற்சிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள யுவதிகள் இருபது பேரும் தமது பொறுப்பை உணர்ந்து நல்லொழுக்க முள்ளவர்களாக நடந்து தினமும் தவறாது சமுகமளித்த இப்பயிற்சியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இப்படி அவர் கூறினார்.

தையல்பயிற்சி நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ் மாவட்ட உதவித் தொழில் ஆணையாளர் திரு. எஸ். இராசநாயகம் கூறியதாவது:-

பயிற்சியின் முடிவில் நடைபெறுகின்ற பொருட்காட்சி உங்கள் திறமையை எடுத்துக் காட்டவிருக்கிறது.

நீங்கள் பயிற்சி பெறும் போது தையல் தொழிலின் நுட்பங்களை நன்றாகக் கற்றுக் கொள்ள வேண்டும்.

தையலில் உள்ள தொழில் நுட்பங்களைக் கண்டு கொண்டால் குறுகிய நேரத்தில் மிகச் சிறந்த சட்டைகளைத் தைத்துக் கொள்ளலாம்

இப்படி அவர் கூறினார்.

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எம். யேசுதாசன், பண்டத்தரிப்பு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி ஆர். யே. யேசுதாசன், தையல் பயிற்சி ஆசிரியை திருமதி நவரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர் (இ-ஒ-161)

மக்கள் முகம்

புலோலி மேற்கு பிரசைகள் குழு

பருத்தித்துறை ஜூலை 1

புலோலி மேற்கு (பருத்தித்துறை) பிரசைகள் குழு அண்மையில் பருத்தித்துறைப் பிரசைகள் குழுத் தலைவர் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு பொ. மாணிக்கவாசகர், துணைத் தலைவர்:- திரு மு சோமசுந்தரம், செயலாளர்:- திரு. வ கு கணபதிப்பிள்ளை, பொருளாளர்:- திரு. எஸ். விஜயரத்தினம்.

செயற்குழு உறுப்பினர்கள்:- திரு. வே. புவனேந்திரம், திரு மு. கதிரவேற்பிள்ளை, திரு. க தங்கராசா, திரு எஸ். சிவசண்முகம், திரு பா இரகுநாதன். (இ-118)

பளை — வீமன்காமம் பிரசைகள் குழு கண்டனம்

காங்கேசன்துறை ஜூலை 1

மண்டைதீவில் கொடூர கொலைகளுக்கு பளை — வீமன்காமப் பிரஜைகள் குழு கண்டனம் தெரிவித்துள்ளது.

பிரஜைகள் குழுவின் விசேஷ கூட்டம் குழுவின் தலைவர் திரு. மு. சின்னத்துரை தலைமையில் நடந்த சமயமே கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றும் தீர்மானங்கள் வருமாறு:

★ தமிழ் மக்களுக்காக தன்னையே அர்ப்பணித்து சேவையாற்றிவந்த அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. விஸ்வலிங்கத்தின் மறைவு தமிழ் மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் இவர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தல்.

★ அடுத்த மாதம் 12ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் உற்சவங்கள் சிறப்பாக நடைபெற நடவடிக்கை எடுத்து உதவும்படி யாழ் அரசாங்க அதிபரைக் கோருதல். (இ-68)

நீங்கள் டென்மார்க் செல்ல விரும்பினால்
உங்கள் ஆசனம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது

ஏமாற்றம் பற்றிய பயமேயின்றி கொழும்பிலிருந்து நேரடியான பயணம்.

பிரயாணத் துறையில் நீண்ட கால அனுபவத்தையும் மக்களின் நம்பிக்கையையும் பெற்றவர்களை சந்தியுங்கள்!

ரெலிபோன்-- ரெலெக்ஸ்
24 மணி நேர சேவை

எங்கள் சேவை:
★ எல்லா நாடுகளுக்கும் பிரயாண ஒழுங்குகள்
★ சலுகைக் கட்டண விமானச் சீட்டுகள்
★ Confirmations, Re-Confirmations
★ பாஸ்போட், விசா, பொண்ட்.
★ இந்தியப் பயணத்தில் விசேட வசதிகள்
★ எந்த நாட்டுக்கும் துரித தொடர்பு
★ நியாயமான சரியான கட்டணம்
★ பாதுகாப்பு மிக்க இடம்
★ இரவில் தங்க அறை வசதி
★ பாதுகாப்பான வாகனத் தரிப்பிடம்

dyn ads

Mack Communications & Travels
இல:8, முதலாவது ஒழுங்கை, பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம். Tele: 24791, 24836

உதய சங்கற்பம்

முகத்திதி செய்த புகழ்வன் உன்னைப் படுகுழியில் வீழ்த்துகிறான்

— அலி (ரலி)

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல, 15 2வது ஒழுங்கை
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24805
22073
01-07-86
த பெ 23

வடக்கும் கிழக்கும் இணைந்தால் நட்டம் என்ன?

மாகாண சபைத் திட்டத்தின் கீழ் வடக்கும், கிழக்கும் இணைக்கப்பட மாட்டா. இரண்டும் தனித்தனிச் சபைகளாகத்தான் இயங்கும்.

இது தமிழரின் பாரம்பரிய பிரதேசத்தைப் பிரித்து வைக்கும் திட்டம் இவ்வாறு தமிழர்களில் பெரும்பாலானவர்கள் கருதுகிறார்கள்.

ஆனால், தமிழர்களுக்கு என்று பாரம்பரிய பிரதேசம் அல்லது பிரதேசங்கள் உள்ளன என்ற சித்தாந்தம் நிராகரிக்கப்பட்டுவிட்டதாக அரசாங்கத் தரப்பில் கூறப்படுகிறது

ஜனாதிபதி கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்விஷயம் வலியுறுத்தப்பட்டது செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளித்த காணி அமைச்சர் திரு காமினி திசநாயக்கா தமிழர்களுக்குப் பாரம்பரிய தாயகம் இருப்பதாகக் கூறப்படும் கோட்பாடு முற்றாக நிராகரிக்கப்பட்டு விட்டதாக அடித்துக் கூறினார்

மனிதன் பிறந்தது பூமியில். அவன் வாழ்வதும் பூமியில் அவன் தனது ஆகக் குறைந்த அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இல்லிடம் ஆகிய மூன்றையும் தேடிக் கொள்வதற்காவது காணி தேவைப்படுகிறது — பூமி அவசியமாகிறது

ஆகையால் அவன் தனது வசதி, வாய்ப்புகளுக்கு ஏற்றமாதிரி தனக்கென ஒரு துண்டுக் காணியையாவது சொந்தமாக்க விரும்புகிறான்.

மனிதர்கள் ஒன்று சேர்ந்தது தான் சமூகம். அந்தச் சமூகம் தனக்கென ஒரு சொந்த இடத்தை வைத்திருக்க விரும்புகிறது குறிப்பிட்ட சமூகம் தேடிப் பெற்றுக் கொண்ட பிரதேசம் தான், காலஓட்டத்தில் அதன் தாயகமாகிறது. அந்தப் பிரதேசத்தில் பரம்பரை பரம்பரையாகப் பிறந்து வாழ்ந்து வரும் சமூகம் அதனைத் தனது தாயகமாகக் கொள்கிறது.

தாயகம் என்பதை ஒருவனது சொந்த நாடு என்றும் சொல்கிறோம்.

உலகின் ஐந்து கண்டங்களில் குடியேறி வாழ்ந்த மக்கள் தத்தமது இடங்களைத் தமது தாயகங்கள் ஆக்கிக் கொண்டனர். அவர்களது வழித் தோன்றல்களுக்கும் அவை தாயகமாகி விட்டன

இந்தப் பொது விதி, நியதி இலங்கைத் தமிழருக்கு மட்டும் பொருந்தாதா என்ன? தமது மூதாதையரும், தாமும் வாழ்ந்து வரும் பூமியைத், தமிழர்கள், தமது தாயகம் என்று கருதுவதில் தப்பு என்ன? அதனைப் பாதுகாத்து தமது எதிர்காலச் சந்ததியினருக்கு வாழ்வழிக்க வகை செய்ய வேண்டும் என்று விரும்புவதில் தவறென்ன?

இன்னின்ன நாடு இன்னின்ன மக்களுக்கு — அதாவது அங்கு வாழும் மக்களுக்குச் சொந்தம் இல்லை யென்றால், ஒரு நாட்டவர் அடுத்த நாட்டுக்குப் போவதற்கு பாஸ்போர்ட்டும், விசாவும் தேவை என்ற சர்வதேச விதி ஏற்படுத்தப்பட்டது ஏன்?

பூமியில் பிறந்த மனிதனுக்கு உலகம் முழுவதும் சொந்தம் என்றால் எங்கோ பிறந்த மனிதன் எவரும் வேறு எங்கோ ஒரு இடத்தில் போய் வாழலாமே! நாடுகள் என்றும், எல்லைகள், வரையறைகள், சட்டவிரோதக் குடிபெயர்வுகள் என்றும் எதுவுமே தேவைப்பட மாட்டாவே!

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்த 38 வருடங்களில் தமது சொந்த பூமி எவ்வாறு குறுகிப்போனது என்பதாவது எல்லாத் தமிழர்களுக்கும் தெரியும் அதனால்தான் அவர்கள் இனியாவது அதனைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார்கள்.

கண்டியப் பிரதானிகள் சங்கம், நாட்டில் மூன்று மாநிலங்களை ஏற்படுத்தி அரசாட்சி செய்ய வேண்டும் என்று 1927 ஆம் ஆண்டு டொனமூர் கமிஷனிடம் கேட்டது.

அந்த மூன்றில் ஒன்று வடக்கு - கிழக்கு இணைந்த ஒரு மாநிலம். வடக்கும் கிழக்கும் சேர்ந்து தமிழர் தாயகமாக இருந்தது என்பதற்கு அந்த அத்தாட்சி ஒன்றே போதும் அல்லவா?

கடந்த வாரத்தில்,

அரசியல் கட்சிகள் மாநாட்டின் ஆரம்ப நாளன்று இந்தச் "சரித்திரத்தை', ஜனாதிபதியே தமது முடிவுரையில் குறிப்பிட்டிருக்கிறார்

ஆனால் யோசனையைச் சமர்ப்பித்துப் பேசிய போது, நாட்டின் ஒற்றுமையை விற்றுவிட முடியாது என்று தெரிவித்தார்

தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை இணைத்து அவர்களுக்குச் சுயாட்சி வழங்குவதால் நாட்டின் ஒற்றுமை எவ்வாறு பாதிக்கப்படும்?

தமிழ்ப் பகுதிகளுக்கும் ஏனைய பகுதிகளுக்கும் இடையில் கடல் தோன்றிவிடுமா என்ன?

இந்தியா. அமெரிக்கா, ரஷ்யா, கனடா, சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளின் மாநில சுயாட்சி பொதிந்த சமஷ்டி அரசமைப்பு இருப்பதால் அந்த நாடுகள் பிளவுண்டது உண்டா?

தனக்குத் தனக்கு என்று ஒரு காணி இருந்தால்தான் எவனும் வாழலாம் எனவே தமிழ் மக்களும் தமது சொந்தத்தில் வாழ்வதற்கு அவர்களுக்கு என்று ஒரு தாயகம் தேவை.

அதற்கு வகை செய்யாத அரசியல் தீர்வு அவர்களுக்கு என்ன விதத்தில் நன்மை செய்யப்போகிறது?

அமைச்சரவை மாற்றம்

பெங்களூர் ஜூன் 30

கர்நாடக முதலமைச்சர் திரு ராமகிருஷ்ண ஹெக்டே தமது அமைச்சரவையை மாற்றி அமைத்துள்ளார்.

திரு.எச் டி. கிருஷ்ணப்பா திரு. கிருஷ்ண ரெட்டி ஆகிய இருவர்களுக்கு அமைச்சர் பதவிகள் புதிதாகக் கிடைத்துள்ளன.

வெளி உலகில்

சிதம்பரம் எம். ஜி. ஆர். சந்திப்பு

சென்னை ஜூன் 30

இலங்கை அரசு இனப்பிரச்சினைக்கு வகுத்துள்ள புதிய திட்டம் பற்றி திரு பி. சிதம்பரம் வெள்ளி இரவு தமிழக முதல்வர் எம். ஜி இராமச்சந்திரனைச் சந்தித்துப் பேசினார். (இ-ஒ)

7 பேருக்கு மரண தண்டனை

அக்ரா ஜூன் 30

கானாதேசத்தின்புரட்சி ராணுவ அரசை கவிழ்ப்பதற்குச் சதிசெய்த ஏழு பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது (உ-ஒ)

பனைதொழிலாளர் காப்புறுதி

சென்னை, ஜூன் 30

தமிழ்நாடு பனைத் தொழிலாளர்களுக்கு காப்புறுதித் திட்டத்தில் கூடுதலான ஆர்வம் ஏற்பட வழி வகுக்கப்படவுள்ளதாக மாநிலஅரசு தெரிவித்தது

பனை மரத்திலிருந்து விழுந்து மரணமானால் பனைத் தொழிலாளருக்கு தற்பொழுது வழங்கப்படும் உதவித் தொகையான 5000 ரூபாவை உயர்த்துவது பற்றியும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றது (இ-ஒ)

அ. தி. மு. க ஊர்வலம்

சென்னை, ஜூன் 30

தமிழ்நாட்டில அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் பத்தாவது ஆண்டு தொடக்க விழாவை யொட்டி தொண்டர்கள் பிரமாண்டமான சைக்கிள் ஊர்வலம் ஒன்றை நடத்தினார்கள் (இ-ஒ)

நஜீரியாவில் தடை

லாவோஸ், ஜூன் 30

அடுத்த பத்து வருடங்களுக்கு பொது ஸ்தாபனங்களில் அங்கம் வகிக்க முடியாதவாறு முன்னாள் அரசியல்வாதிகளுக்கு நைஜீரியா அரசு தடைவிதித்துள்ளது

1979 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 1983 டிசம்பர் வரை அரசியலில் இருந்தவர்களுக்கே இத்தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளது

இவர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுவர். (இ-ஒ)

காணமற்போன ராஜதந்திரி

இஸ்லாமாபாத் ஜூன்30

நாடு திரும்புமாறு உத்தரவிடப்பட்டிருந்த ஒரு ஆப்கான் ராஜதந்திரியும் அவரது குடும்பமும் கராச்சி நகரில் காணமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளது (இ-ஒ)

தென் ஆபிரிக்காவில்

பிரமாண்டமான ஊர்வலம்

ஜோகனஸ்பேர்க், ஜூன் 30

தென் ஆபிரிக்காவில் அவசரகால நிலைமை அண்மையில் பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் முதல் தடவையாக 10,000 பேர் வரையில் கலந்து கொண்ட ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்று நடந்தது.

தென் ஆபிரிக்கா மீதான பொருளாதார நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் கறுப்பு இன மக்கள் தான் மேலும் பாதிக்கப்படுவர் என இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்த சூலு இயக்கத் தலைவர் பூட்டேலேசி தெரிவித்தார்

ஊர்வலம் வன்செயல்களில் முடிவுற்றது

பல நாடுகள் தென் ஆபிரிக்காவின் மீது பொருளாதார நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஏகோபித்துக் குரல் கொடுத்து வருகின்றன.

ஆனால் அப்படி ஒரு பொருளாதார நெருக்கடி உருவாகும் பட்சத்தில், கறுப்புஇன மக்களுக்கு உணவுப்பற்றாக்குறையை ஏற்படுத்தவும், பட்டினிசாவுக்கு வழிவகுக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள தென்ஆபிரிக்க இனவாத அரசு தவறமாட்டாது

இவ்வாறு மேலும் அவர் தெரிவித்தார். (இ-ஒ)

சிவசேனை பயமுறுத்தல்

சண்டிகார் ஜூன் 30

பஞ்சாப் மாநிலத்தில் சிவசேனை இயக்கம் சீக்கிய மக்களை படுகொலை செய்யப்போவதாக அறிவித்ததை தொடர்ந்து பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மாநில அரசு நிலைமையை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க அதிக அளவிலான ராணுவத்தை அங்கு அனுப்பியுள்ளது. (இ ஒ)

கடலின் கீழ் கேபிள்

புதுடில்லி ஜூலை 30

இந்தியாவிற்கும் ஐக்கிய அரபுக் குடியரசுக்கும் இடையில் கடலின் கீழான கேபிள்கள் அமைக்கப்பட்டுள்ளது

70 கோடி ரூபா இதற்கென செலவு செய்யப்படும். (இ-ஒ)

நியூட்ரன் குண்டு பிரான்ஸ் தயாரிக்கும்

பாரிஸ் ஜூன் 30

அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்குமிடையிலான ஆயுதக் குறைப்பு பேச்சுவார்த்தைகள் வெற்றிதராதபடியின் தனது நடு நியூட்ரன் குண்டுகளை உற்பத்தி செய்யக்கூடும் என்று பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரன்ட் எச்சரித்துள்ளார்.

இந்த நியூட்ரன் குண்டுகள் பரவலாக சேதம் விளைவிக்காமல தீவிரமான கதிர்வீச்சு மூலம் உயிர்களை கொல்லும் சக்திவாய்ந்தவை.

அடுத்த வாரம் வாஷிங்டனில் ஜனாதிபதி றேகனை ஜனாதிபதி மித்தரன்ட் சந்திப்பார். (இ-ஒ)

தென் ஆபிரிக்கா மீது பொருளாதார நடை கிடையாது

லண்டன், ஜூன் 30

தென் ஆபிரிக்காவிற்கு விரைவில் பயணம் மேற்கொள்ளவிருக்கும் பிரிட்டிஷ் வெளியுறவு மந்திரி சேர் ஜெவ்ரி ஹோவ், அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்கப் போவதில்லை என்று கூறியுள்ளார். (ஒ-இ)

மாகாணசபையின் உத்தேச அதிகாரங்கள்:

பொலீஸ் நியமனங்கள் செயற்பாடுகள்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாரித்த புதிய யோசனைகள் அரசியல் கட்சிகள் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டன.

அந்த யோசனைகளின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு வழங்கப்படுவதற்குஉத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் தொடர்ந்து உதயனில் பிரசுரமாகின்றன.

இன்று இரண்டாம் பகுதி வெளியிடப்படுகிறது

சட்டம் ஒழுங்கு பற்றிய பரவலாக்கல்

1. தேசியப் பாதுகாப்பு, சிவில் அதிகாரத்தை நிலைநாட்ட உதவக்கூடியதான நடவடிக்கைகளுக்கு மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஆயுத படைகளை உபயோகிப்பது — இந்த அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய பொது ஒழுங்குக்கான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும்.

2. பொலீஸ் மா அதிபரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் இலங்கைப் பொலீஸ்படை கீழ் வரும் பிரிவுகளைக்கொண்டதாக இருக்கும்.

(i) தேசியப்பிரிவு (விசேட யூனிட்டுக்களையும் சேர்த்து),

(ii) மாகாணப்பிரிவு,

(அ) தேசியப் பிரிவில் பொலீஸ் மா அதிபர், பிரதிப் பொலீஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலீஸ் அதிபர், உதவிப் பொலீஸ் அதிபர் மற்றும் தேசிய மட்டத்தில் நியமனம் பெற்றவர்கள் இருப்பர்.

(ஆ) மாகாணப்பிரிவில் தேசிய மட்டத்தில் நியமனம் பெற்றவர்களான பிரதி பொலீஸ் மா அதிபர், சிரேஷ்ட பொலீஸ் அதிபர், பொலீஸ் அதிபர், உதவிப் பொலீஸ் அதிபர் ஆகியோருடன் மாகாண மட்டத்தில் நியமனம் பெற்ற மாகாண உதவிப் பொலீஸ் அதிபர், பிரதம இன்ஸ்பெக்டர்,சப்இன்ஸ்பெக்டர், சார்ஜன்ட், கான்ஸ்டபிள்களும் இருப்பர். மாகாணமட்டத்தில் நியமனம் பெற்ற பொலீஸார் தேசிய மட்டத்தில் பதவி உயர்வு பெற அருகதை உடையவர்கள்

3 தேசியமட்டத்திற்கான ஆட்சேர்ப்பு, மாகாண மட்டத்திலான பொலீஸாருக்கு தேசிய மட்டத்துக்கான பதவி உயர்வு வழங்குதல் ஆகியன தேசிய பொலீஸ் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

அந்த ஆணைக்குழுவில் மூவர் உறுப்பினர்களாக இருப்பர். அவர்கள் வருமாறு;

(அ) பொலீஸ் மா அதிபர்.

(ஆ) ஜனாதிபதியின் பிரதிநிதி

(இ) பிரதம நீதியரசரின் பிரதிநிதி.

4 பொலீஸ் மா அதிபரைத் தவிர்ந்த, தேசிய பிரிவில் உள்ள ஏனைய பொலீஸாரின் பதவி உயர்வு, இடமாற்றங்கள் ஒழுங்கு நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு தேசிய பொலீஸ் ஆணைக்குழுவே பொறுப்பு.

5 மாகாணப் பொலீஸ் பிரிவில் பணியாற்றும்போது மாகாண பொலீஸ் ஆணைக் குழுவினால் ஒழுங்கு நடவடிக்கைக்கு ஆளாக்கப்படும் தேசியப் பிரிவுப் பொலீஸ் அதிகாரிகளின் மேன் முறையீடுகளை விசாரித்து தீர்மானிக்கும் அதிகாரம் தேசிய பொலீஸ் ஆணைக்குழுவுக்கு இருக்கும்.

6. ஆட்சேர்ப்பு,பதவி உயர்வு சம்பந்தமாக எல்லாப்பிரிவு பொலீஸாருக்கும் ஏற்றதான அடிப்படைத்திட்டம் ஒன்றை தேசிய பொலீஸ் ஆணைக் குழு தயாரிக்கும். அத்திட்டம் சகல மாகாணப் பொலீஸ் பிரிவுக்கும் ஏற்றதாக அமையும்

7. மாகாணப் பொலீஸ் பிரிவுக்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளை 3 உறுப்பினர்களைக் கொண்ட மாகாண பொலீஸ் ஆணைக்குழு மேற்கொள்ளும்.

மாகாணத்துக்கான பிரதிப் பொலீஸ் மா அதிபர், ஜனாதிபதியின் [illegible] முதலமைச்சரின் பிரதிநிதி [illegible] வில் இருப்பர்

8. மாகாணப் பிரிவில் பணிபுரியும் பொலீஸார் சம்பந்தமான இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், ஒழுங்கு நடவடிக்கை முதலியவற்றுக்கு மாகாண பொலீஸ் ஆணைக்குழுவே பொறுப்பாக இருக்கும்

தேசியப்பிரிவில்இருந்து மாகாணப் பிரிவுக்கு அனுப்பப்படும் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் தரம் வரையான பொலீஸாரின் பதவி உயர்வுக்கும் மாகாண பொலீஸ் ஆணைக்குழுவே பொறுப்பு.

பிரதிப் பொலீஸ் மா அதிபரைத் தவிர்ந்த, தேசியப்பிரிவில் இருந்து கொண்டு மாகாணப் பிரிவில் கடமையாற்றும் சகல பொலீஸார் மீதும் நடவடிக்கை எடுக்க மாகாணப் பொலீஸ் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு

அப்படி நடவடிக்கைக்குள்ளாகும் பொலீஸ் அதிகாரிக்கு தேசிய பொலீஸ் ஆணைக் குழுவுக்கு மேன்முறையீடு செய்யும் உரிமை உண்டு இது விஷயத்தில் தேசிய பொலீஸ் ஆணைக் குழுவின் தீர்ப்பே இறுதியானது.

9 தேசிய பொலீஸ் ஆணைக்குழுவோ அல்லது மாகாண பொலீஸ் ஆணைக்குழுவோ தனது அதிகாரங்களை பின்னர் விவரிக்கப்படும் ஆட்களுக்கோ, அதிகார சபைகளுக்கோ பாரப்படுத்தலாம்.

10 முதலமைச்சரின் ஆலோசனையுடன் பொலீஸ் மா அதிபர், மாகாணத்துக்கான பிரதிப் பொலீஸ் மா அதிபரை நியமிப்பார். அப்படி ஒரு உடன்பாடு இருவருக்கும் இடையில் ஏற்படாதவிடத்து, ஜனாதிபதி, முதலமைச்சரின் ஆலோசனையுடன் பிரதிப் பொலீஸ் மா அதிபரை நியமிப்பார்.

11. தேசியப்பொலீஸ் பிரிவில் எவ்வளவு பேர் பணியாற்ற வேண்டும் என்பதை நிர்ணயிக்கும் அதிகாரம் அரசாங்கத்துக்கே உண்டு.

மாகாண பொலீஸ் பிரிவில் எத்தனை பேர் பணியாற்றுவார் என்பதை ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் மாகாணசபை நிர்வாகம் தீர்மானிக்கும்.

மாகாணத்தின் விஸ்தீரணம், சனத்தொகையைகவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் இது சம்பந்தமான கொள்கைகள் எல்லா மாகாணங்களுக்கும் ஒரேமாதிரியாகவே இருக்கும்.

12 தேசிய, மாகாணப் பிரிவுகளில் கடமையாற்றும் பொலீஸாருக்கான சம்பளத்திட்டம் மாகாண முதலமைச்சர்களின் ஆலோசனையுடன் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும்.

13. தேசிய பிரிவிலுள்ளபொலீஸார் கையாள வேண்டிய ஆயுதங்கள், வெடி மருந்துகளின் தன்மை, தொகை மற்றும் உபகரணங்கள் பற்றி தேசிய பொலீஸ் ஆணைக் குழு தீர்மானிக்கும்

மாகாணப் பிரிவில் பணியாற்றும் பொலீஸார் எவ்வகையான ஆயுதங்கள், வெடிமருந்துகளைக் கையாளுவது என்பது பற்றியும் தேசிய பொலீஸ் ஆணைக் குழு, மாகாணப் பொலீஸ் ஆணைக்குழுவின் ஆலோசனையுடனேயே தீர்மானிக்கும்

(தொடரும்)

குறள் :

பயனில பல்லார் முன் சொல்லல் நயனில
நட்டார்கண் செய்தலின் தீது.

பொருள் :

பலர் முன்னே பயனில்லாத சொற்களைச் சொல்லுதல், நண்பரிடத்தில் அறம் இல்லாத செயல்களைச் செய்தலை விடத் தீமையாகும்.



இனப் பிரச்சினையைத் தீர்ப்பதில்

இந்தியாவின் பங்கு எந்த அளவில் உள்ளது?

ஜனாதிபதியின் பதில்

ஜனாதிபதி ஜெயவர்த்தன கடந்த வியாழன் செய்தியாளர் மாநாடு ஒன்று நடத்தியிருந்தார்

அந்த மாநாட்டில் பிரஸ்தாபிக்கப்பட்ட விடயங்களின் மூன்றாவது பகுதி இன்று பிரசுரமாகின்றது

கேள்வி: மாகாண சபைகளின் நிர்வாகம் எந்த மொழியில் அமையும்?

ஜே. ஆர்: அரசமைப்புச் சட்டத்தின்படி நாட்டின் உத்தியோக மொழி சிங்களம். அதில் மாற்றம் இல்லை

ஆனால் தமிழும் அரசமைப்புச் சட்டத்தின்படி தேசிய மொழி ஆக்கப்பட்டுள்ளது

வடக்கு -கிழக்கு மாகாணங்களில் நிர்வாக - நீதிமன்ற மொழியாக தமிழும் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளது

இந்த சட்டங்கள் தொடர்ந்து அமுலில் இருக்கும்.

கேள்வி: மாகாண சபைத் திட்டத்தின் கீழ் மாவட்ட சபைகள், மாவட்ட அமைச்சர் முறை தொடர்ந்து அமுலில் இருக்குமா?

ஜே ஆர்: மாவட்ட சபைகள் கலைக்கப்படும்; மாவட்ட அமைச்சர் முறையும் நீக்கப்படும். ஆனால் மாவட்ட நிர்வாகம் தொடர்ந்தும் அமுலில் இருக்கும் மாகாண சபையினால் முழு மாவட்டங்களையும் சரிவர நிர்வகிக்க முடியாதே!

கேள்வி: சட்டம் ஒழுங்கு அதிகாரங்கள் பற்றி சுதந்திரக் கட்சித் தூதுக்குழு உங்களுடன் பேசிய சமயம் ஏதாவது சொன்னதா?

ஜே ஆர்: இக் கேள்விக்குப் பதிலளிப்பது மிகவும் கடினமானது. சுதந்திரக் கட்சியினர் புதிய யோசனைகளை இன்னும் பார்க்கவில்லையே. அவர்கள் பழைய திட்டத்தைத்தான் வைத்திருக்கிறார்கள்

கேள்வி: பேச்சுக்களில் தமிழர் விடுதலைக் கூட்டணி, போராளிக் குழுக்கள் பங்குபற்ற முடியுமா?

ஜே ஆர்: தமிழர் விடுதலைக் கூட்டணி வரமுடியும் ஆனால் தீவிரவாதிகள் வரமுடியாது அவர்கள் வந்தால் [illegible] செயற்படுவார்கள் நாட்டுச் சட்டத்தின்படி குற்றமிழைத்தவர்கள் அவர்கள். ஆயுதங்களை அவர்கள் கீழே போட்டால் நாம் மன்னிப்பு வழங்குவோம்.

கேள்வி: இந்தியாவின் பங்கு இனப் பிரச்சினைத் தீர்வில் எந்த அளவில் அமைந்துள்ளது?

ஜே. ஆர்: 1983 கலவரத்துக்குப் பின்னர் தான் இந்தியா இனப் பிரச்சினைத் தீர்வுக்கு உதவ முன் வந்தது

தமிழர்கள் கலவரத்தின் போது காரணமின்றிக் கொல்லப்பட்டனர்.

திருமதி இந்திராகாந்தி என்னுடன் பேசினார். திரு ஜி பார்த்தசாரதியை அனுப்புவது பற்றி சொன்னார் நான் சம்மதித்தேன் இந்தியர்களும் அச்சமயம் இலங்கையில் இருந்தனர். இந்தியப் பிரசா உரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுவிட்டது.

ஆனால் இந்திய பிரசா உரிமை பெற்ற இந்தியர்கள் தாயகம் திரும்பாமல் நிறைய உள்ளனர்.

தீர்வு ஒன்றைக் காணுகையில் தமிழ்நாடு பற்றியும் நாம் சிந்திக்க வேண்டும். நிறைய இலங்கைத் தமிழர் அகதிகளாக தமிழ்நாட்டில் உள்ளனர்.

அவர்கள் மீண்டும் இலங்கை திரும்பி வர வேண்டும். தீர்வு காணும் விஷயத்தில் இந்தியா பெரிய பங்களிப்புச் செய்யலாம்

இலங்கையில் மீண்டும் ஜனநாயகம் நிலைக்க இந்தியா உதவும் என்று நான் நம்புகிறேன்

கேள்வி: இலங்கை மிக மோசமான காலத்தைத் தாண்டிவிட்டது என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

ஜே ஆர்: அப்படித் தான் நம்புகிறேன்

London Pitman Institute & IAB
Examinations
BOOK-KEEPING & ACCOUNTS
புதிய வகுப்புக்கள்
கிழமை நாட்கள் — காலை 1000 11 00
ஆரம்பம்: 02-07-1986
சனி, ஞாயிறு — காலை 10 00-12 00
ஆரம்பம்: 05-07-1986
St. Anthony's Institute of Commerce
Pandatarippu.

உதயன்
01 07 1986 செவ்வாய்க்கிழமை

London IAB Examinations
IAB பரீட்சைகள் யாழ்ப்பாணத்தில் நடத்த
ஒழுங்குகள் செய்யப்படுகின்றன
பதிவு செய்தவர்களும், பதிவு செய்ய
விரும்புவோர்களும் உடனடியாய்
தொடர்புகொள்ளவும்.
Director:
St. Anthony's Institute of Commerce.
Pandatarippu

கிளிநொச்சி அசம்பாவிதம்:

இழப்பு விபரம் சேகரிப்பு

அரசஅதிபர்நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 1
கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களால் உயிரிழந்தவர்கள், உடைமைகளை இழந்தவர்கள் ஆகியோரின் விவரங்களைச் சேகரிக்க கிளிநொச்சி அரச அதிபர் திரு. என். ஜெயநாதன்நடவடிக்கை எடுத்துள்ளார்.

உயிரிழந்தவர்களின் உறவினர்கள் வீடுவாசல் உடைமைகளைஇழந்தவர்கள் அதுபற்றிய விவரங்களை அந்தந்தப் பகுதி கிராமசேவையாளர் ஊடாகத் தனக்கு அனுப்பிவைக்கும்படி கிளிநொச்சி அரச அதிபர் திரு ஜெயநாதன் கேட்டுள்ளார். நேற்றுத் தொடக்கம் கிளிநொச்சியில் அகதிமுகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு இலவச பங்கீட்டு உணவுப் பொருள்கள் வழங்கும்வேலைகள் ஆரம்பித்துள்ளன என்று செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி அரசசெயலகம், பரந்தனில் உள்ள கட்டடம் ஒன்றுக்கு மாற்றப்படுவது நிச்சயமாகிவிட்டது என்று தெரியவந்துள்ளது.

கிளிநொச்சியில் இருந்து அரச செயலகத்தை பரந்தனுக்கு இடமாற்றம் செய்வதை பாதுகாப்பு வட்டாரங்கள் முன்னர் எதிர்த்தன என்றும் இப்போது அதற்கு இணக்கம் தெரிவிக்கப்படுள்ளதாகவும் கூறப்படுகின்றது (இ-எ-6)

கிளிநொச்சி

கடிதங்கள் பரந்தன் தபால் நிலைய மேல்மாடியில்

உருத்திரபுரம் ஜூலை 1
கிளிநொச்சியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்குரிய கடிதங்கள் அனைத்தும் பரந்தன் தபால் நிலைய மேல்மாடியில் வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் தபால் நிலைய அதிபர் எம். தி தர்மலிங்கத்துடன் தொடர்பு கொண்டு தத்தமது கடிதங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று கேட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, திருவையாறு, பரவிப்பாஞ்சான் கணேசபுரம், திருநகர், கனகபுரம் பகுதி மக்களின் கடிதங்களே கூடுதலாக இருக்கின்றன.

இவர்கள் அனைவரும் இடம் பெயர்ந்துள்ளதாலும், கிளிநொச்சி தபால் நிலையம் பரந்தன் தபால் நிலைய மேல்மாடிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாலும் இடம் பெயர்ந்துள்ள மக்களின் கடிதங்கள் பரந்தன் தபால் நிலைய மேல் மாடியில் வைக்கப்பட்டுள்ளன.

இடம் பெயர்ந்த மக்கள் வார நாட்களில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை எந்நேரமும் தமது கடிதங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பொது மக்கள் வாழும் பகுதிகளுக்கு மட்டும் தபால் ஊழியர்கள் கடிதங்களை நேரில் கொண்டு சென்று விநியோகிப்பர். (இ-155)

A/L 88
தூய பிரயோக
கணிதம்
ஆரம்பம் : யூலை 5
10—15; காவிகள்
11—45 திரிகோண கணிதம்
ஆசிரியர்:
ர. மோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)
யூலை 5இற்குப் பின்பு அனுமதி இல்லை

புது முறிப்பில் விசுவலிங்கம் அஞ்சலி கூட்டம்

உருத்திரபுரம், ஜூலை 1
தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழக தலைவர் கா. விசுவலிங்கத்திற்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக புதுமுறிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் இன்று செவ்வாய் காலை இரங்கல் கூட்டம் நடத்துகிறது.

கூட்டுப் பிரார்த்தனை, அன்னதானம் ஆகியவையும் இடம்பெறும்.

பிரஸ்தாப கிராம அபிவிருத்திச் சங்க தலைவர் மு.இராமநாதன் தலைமையில் புதுமுறிப்பு விக்கினேஸ்வர வித்தியாலயத்தில் வைபவம் நடைபெறும் (இ-155)

திருமலை : கைதா...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
எண்ணிக்கைக்கும் பிரசைகள்குழு வைத்துள்ள பட்டியலுக்கும் இடையில் காணப்படும் வித்தியாசம்பற்றி பிரசைகள் குழு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. (இ-எ-150)

ENJOY LIFE IT IS WORTH LIVING
HOTEL GNANAMS
CHINESE MEALS
Ranging from Rs 25/- to Rs. 40/-
A/C or non A/C Rooms
ALSO
COOL DRINKS, SHORT-EATS, LUNCH
ORDERS UNDERTAKEN FOR
() WEDDING RECEPTION
() BIRTHDAY PARTIES
() COCKTAIL PARTIES
Etc. Etc. Etc. Etc. Etc.
HOTEL GNANAMS
299, Clock Tower Road, JAFFNA
Tele: 22082, 23067
OPEN DAILY FROM 9-30 A.M. TO 4 30 P.M.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி இரண்டாவது ஒழுங்கை 15 ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டுத் திகதி 01—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15, Second Lane, Power House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office L Sri Lanka under number Q J 60 N 86

மகனை சிப்பாய்கள் கூட்டிச்செல்ல தாயார்

அழுதபடி மாட்டுடன் திரும்பினர்

யாழ்ப்பாணம் ஜூலை 1
மேயச்சென்ற மாட்டைத் தேடிப் போனவரை இராணுவம் பிடித்துப் போனது.

இச்சம்பவம் பலாலி விமான நிலையப்பகுதிக்கு அண்மையில் மயிலிட்டியில் நடந்தது.

ஞாயிறு நடந்த இச்சம்பவம்பற்றி அறியப்படுவதாவது:

காணாமல் போன மாட்டைத்தேடி தாயும் மகனுமாக இருவர் சென்றனர்.

பலாலி விமான நிலையத்துக்கு அண்மையிலே இவர்களின் மாடு மேய்வது வழமை.

விமான நிலையச் சுற்றுடலில் பற்றைக்குள் பதுங்கியிருந்த சிப்பாய்கள் இவர்கள் இருவரையும் பிடித்து விசாரித்தனர்.

தாங்கள் மாட்டைத் தேடி வந்ததாக கூறி, அங்கே மேய்ந்து கொண்டிருந்த மாட்டையும் இவர்கள் அடையாளம் காட்டினர்.

இவர்களை திருப்பி மாட்டுடன் செல்ல சிப்பாய்கள் அனுமதித்தனர்.

இவர்கள் சிறிதுதூரம் சென்றதும் ஒரு சிப்பாய் ஓடிவந்து ''பெரியய்யாவிடம் காட்டிவிட்டு விடுகிறோம்'' என்று சொல்லி மகனை முகாமுக்கு வரும்படி அழைத்தான்.

தாயோ அழுது மன்றாடியபடி மகன் பின்னே முகாமுக்கு செல்ல எத்தனித்தாள்.

''வந்தால் சுட்டுவிடுவோம், மகனை விசாரித்து விட்டுவிடுவோம்'' என்று கூறித்தாயை திருப்பி அனுப்பினர்.

மகனை சிப்பாய்கள் கொண்டுபோக, மாட்டை மட்டும் அழுதபடி தாய் வீடு கொண்டு வந்து சேர்ந்தார்.

இதுவரையும் மகனை சிப்பாய்கள் விடுதலை செய்யவில்லை, என்று அத் தாயார் அரச அதிபரிடம் முறையிட்டுள்ளார்.

மயிலிட்டியைச் சேர்ந்த கந்தப்பிள்ளை கருணைநந்தன் எனும் 27 வயது இளைஞனே சிப்பாய்களினால் பிடிக்கப்பட்டவர் ஆவர் (இ-5)

சங்கிலி நாடகம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
தமிழ்ப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய 'சங்கிலி' நாடகம் நாளை 3 ஆம் திகதி புதன்கிழமை சுன்னாகம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் மேடையேற்றப்படவுள்ளது.

யாழ் பல்கலைக் கழகத் தமிழ் மன்றத்தினர் தயாரித்து வழங்கும் இந் நாடகத்தை கலாநிதி இ பாலசுந்தரம் நெறிப்படுத்தியுள்ளார். (இ-எ)

யாழ். ஆஸ்பத்திரி மருந்துவகைகளைகப்பல் மூலம் கொண்டு வர முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 1
அனுராதபுரம் ரயில் நிலையத்தில் முடங்கிக் கிடக்கும் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கிடைக்க வேண்டிய மருந்து வகைகளை கப்பல் மூலம் எடுப்பிக்க யாழ் ஆஸ்பத்திரி வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சுரேந்திரன் நச்சினார்க்கினியன் முயற்சிகள் எடுத்திருக்கிறார்.

அனுராதபுரம் ரயில் நிலையத்தில் இருந்து இம் மருந்து வகைகளை யாழ்ப்பாணம் கொண்டு வர எவரும் முன்வருகின்றார்கள் இல்லையே என்றும் டாக்டர் நச்சினார்க்கினியன் கவலை தெரிவித்தார்.

பதற்றம் காரணமாக லொறிச் சொந்தக்காரர்கள் அனுராதபுரம் செல்லத் தயங்குவதே இதற்குக் காரணமாகும். (இ-எ-6)

நிலக்கண்ணி.

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
பற்றி தமிழீழ விடுதலைப் புலிகளினால் விடுக்கப்பட்ட அறிக்கை வருமாறு:—

கடந்த 27 ஆம் திகதி திருமலை மாவட்டத்தில் கித்துல் ஓயா இராணுவ முகாமில் இருந்து அளுத்ஓயா முகாமுக்கு ஒரு ஈ. எஸ் எப் டிரக்கில் 15 பேரும், பிறிதோர் டிரக்கில் சில இராணுவத்தினரும் நேற்று சென்று கொண்டிருந்த சமயம் எமது வீரர்களின் நிலக்கண்ணி வெடியில் சிக்கியதில் ஈ. எஸ். எப் டிரக் முற்றாக சிதைந்தது.

அதில் வந்த 10பேரும் அந்தஇடத்திலேயேமாண்டனர், மிகுதி 5 பேரும் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

பின்னால் வந்துகொண்டிருந்த டிரக்கின் முற்பகுதி லத்த சேதத்திற்கு உள்ளானது.

அதில் வந்தவர்களில் பலர் காயங்களுக்கு உள்ளானார்கள்.

எமது தரப்பில் எதுவித இழப்புகளும் ஏற்படவில்லை இந்த இரு முகாம்களுக்கும் இடையேயான தூரம் 4 மைல்களாகும்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

புலிகள்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
லும் இறுதிவரை எதிர்த்தாக்குதல் புரிந்து தோழர் வீரமரணம் அடைந்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தின்போது எமது ஜீப்பும் முற்றாகச் சேதத்துக்குள்ளானது.

இத்தாக்குதல் சம்பவத்தின்போது எமக்கு உதவியாக எதிர்த் தாக்குதல் புரிந்த 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கத் தோழர்களுக்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் கல்லூரி மாணவன் ஒருவரும் இச்சம்பவத்தின்போது மரணமடைந்தார். இம்மாணவருக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

வேறு பாதையால் செல்லும் வாகனங்களுக்கு 'தண்டனை' வழங்கப்படுமாம்

கொழும்பு, ஜூலை 1
யாழ் - கண்டி பிரதான வீதியைத்தவிர்த்து வேறு பாதைகளினூடாக கொழும்பு - யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் - கொழும்பு போக்குவரத்தில் ஈடுபடும் வாகனங்களுக்குப் பாரதூரமான தண்டனை வழங்கப் பாதுகாப்பு உயர் வட்டாரம் அனுமதித்துள்ளதாக நம்பப்படுகின்றது.

ஹெலிகொப்டர்கள், விமானங்கள் மூலம் இத் 'தண்டனை' வழங்கப்பட வேண்டும் என்று, நேற்றுக் காலை நடந்த உயர் அதிகாரிகள் மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது என்று நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

பிரதான வீதியைப் பாவிக்காது, வேறு பாதையைப் பாவிக்கும் வாகனங்கள் மீதே இத்தகைய கடும் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறதாம். (இ-எ-6)

போக்குவரத்து...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
டாக போக்குவரத்து நடத்திய சகல வாகனங்களும் புத்தூர் சந்தியால் திருப்பி நுணுவில் சென்று போக்குவரத்தை நடத்துகின்றன.

கோப்பாய் — கைதடி பாலம் இத்துடன் நான்காவது தடவையாக குண்டினால் சேதமாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

உருக்குலைந்த

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர் பகுதியில் இருந்து மீன்பிடிப்பதற்காகப் பாலைதீவு சென்ற மீனவர்களே நேற்று இந்தச் சடலத்தைக் கண்டு பிடித்தனர்.

சடலம் உருக்குலைந்த நிலையில் இருந்தபடியால் அவர்கள் [illegible] பாலைதீவுத் திட்டிய[illegible] விட்டுத் திரும்பினர் (இ-10)

வீடு பார்க்க சென்றவர் சூடுபட்டு மரணம்

யாழ்ப்பாணம், ஜூலை 1
முகாமுக்கு அண்மையில் உள்ள தனது வீட்டைப் பார்க்கப் போனவர் இராணுவத்தால் சுடப்பட்டு மரணமானார்.

கட்டுவன் மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த சின்னத்துரை பாலகிருஷ்ணன் என்னும் 55 வயது நபரே மரணமானவர் ஆவார்.

விமான நிலையமுன்பாக உள்ள வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்தவர்களில் இவரும் ஒருவர். (இ-5)

மீனவர் கொலையுண்ட இடத்தில் சமாதி

யாழ்ப்பாணம், ஜூலை 1
மண்டைதீவுக் கடலில் படுகொலை செய்யப்பட்ட குருநகர் மீனவர்களின் நினைவாக மண்டைதீவு ''புனித பேசதுருவார்'' மீன்பிடி அபிவிருத்திச்சங்கம் நினைவுத்தூபி ஒன்றை அமைக்க முன்வந்துள்ளது.

யாழ் நகரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
மேற்கொள்ளப்பட்டது.

கோட்டையில் இருந்து மண்டைதீவுக்கு இராணுவ வாகனங்கள் செல்லும்போதே இந்த வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாக தெரியவருகிறது.

இதனை அடுத்து [illegible] தில்லையில் இருந்தனராயினும் [illegible] அசம்பாவிதம் எதுவும் நிகழவில்லை. (இ-10)

விளையாட்டரங்கு

17 வயதுப் பிரிவிலும் யாழ் இந்து வென்றது

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற 17 வயதுப் பிரிவு கிரிக்கெட் போட்டியில் யாழ் இந்து அணி கொக்குவில் இந்து அணியைத் தோற்கடித்தது.

இந்த அணியின் விக்கெட்டுக்கள் முதலில் மளமளவென சரிந்த போதிலும் இறுதியாட்டக்காரர்கள் இந்த அணியை வெற்றிக்கு இட்டுச்சென்றனர்.

ஒதுக்கப்பட்ட 210 நிமிடங்களில் இந்த அணி 9 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது.

நிதானமாகவும் சிறப்பாகவும் ஆடிய கே ஜெனகன் ஆட்டம் இழக்காமல் 59 ஓட்டங்களையும் எஸ் கே. புவனேந்திரன் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

குகராஜா, சுதாகரன், கெங்காதரன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும், நற்குணேந்திரன், விஸ்வநாத், குணசீலன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்து அணி 110 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பேரின்பநாதன் 20 ஓட்டங்களையும், கணேஷ்குமார் ஆட்டம் இழக்காமல் 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

எஸ் ரவிக்குமார் 4விக்கெட்டுக்களையும், பி பிரபானந்தன், எஸ் கே புவனேந்திரன், கே ஜெனகன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்ஸிற்காக எஞ்சியிருந்த 14 ஓவர்களை யாழ் இந்து அணி அசுர வேகத்தில் எதிர்கொண்டது.

14 ஓவர்களிலும் இந்த அணி 4 விக்கெட்டுக்களுக்கு 110 ஓட்டங்களைப் பெற்றது.

எஸ் கே. புவனேந்திரன், எஸ் ரவிக்குமார் ஜோடி வெகு சிறப்பாக இணைந்தாடி 81 ஓட்டங்களைப் பெற்றது.

வீசப்பட்ட பந்து விக்கெட் காப்பாளர் கையில் இருக்கும்போதும் ஓட்டங்கள் பலவற்றைப் பெற்ற இந்த ஜோடி ரசிகர்களின் ஏகோபித்த பாராட்டையும் பெற்றது.

எஸ் கே. புவனேந்திரன் 46 ஓட்டங்களையும் எஸ் ரவிக்குமார் ஆட்டமிழக்காமல் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.

குணசீலன், நற்குணேந்திரன் ஆகியோர் முறையே 2, 1 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். (இ-7)

டிராக்டர் விற்ற பணம் வாங்கச் சென்றவர் பலி

பரந்தனில் இறந்தவரின் மரணவிசாரணையில் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 1
காலை 8 மணி அளவில் டிராக்டர் விற்ற பணத்தை வாங்கச் சென்றவர் பரந்தன் சந்தியில் இறந்து கிடந்தார்.

கடந்த சனிக்கிழமை காலை பரந்தனில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டின் போது மரணமான வின்சென்ட் ஜோசெப் (68 வயது) என்பவரின் மரண விசாரணை ஞாயிறன்று நடைபெற்ற போது இத்தகவல் தெரிவிக்கப்பட்டது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு க.கேசவன் மரண விசாரணையை நடத்தினார்.

மரண விசாரணையில் சாட்சியமளித்த சின்னத்தம்பி பரமானந்தம் இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் சொன்னதாவது:-

காலை எட்டு மணி அளவில் காலஞ்சென்றவர் தான் விற்ற டிராக்டருக்கான பணத்தை வாங்குவதற்கு குமரபுரம் நோக்கிச் சென்றார்

இந்த வேளை பரந்தன் பக்கமாகக் குண்டுகள் வெடிக்கும் சத்தங்கள் கேட்டன.

எமது பகுதியிலும் குண்டுகள் விழுந்து வெடித்தன.

பயம் காரணமாக நான் வீட்டுக்குள் பதுங்கிக் கொண்டேன்.

தொடர்ந்து பன்னிரண்டு மணி வரை நடைபெற்ற இத் தாக்குதல்கள் சற்று ஓய்ந்தன. அதன் பின்னர் எனக்குத் தெரிந்த ஒருவர் என்னிடம் வந்து ஜே பி பாம் முதலாளி இறந்து கிடப்பதாக தெரிவித்தார்.

நான் உடனடியாக சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று பார்த்தேன்.

அங்கு ஜே. பி பாம் முதலாளி வின்செண்ட் யோசேப் வீதியோரத்தில் இறந்து கிடந்ததைக் கண்டேன்.

இப்படி சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

வைத்தீஸ்வரா கல்லூரி பொருட்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 1
யாழ் வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள கல்வி அபிவிருத்திக் கண்காட்சியை யாழ் மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி திரு சு சோமசுந்தரம் இன்று முற்பகல் 10 30 மணிக்குத்திறந்து வைப்பார். (இ)

பருத்தித்துறை

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
பேரம்பலம் வயது 12 சாளம்பை, 5 சுமார் வயது 55 மதிக்கப்பட்ட ஒரு ஆணின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலை பிரதச் சாலையில் அடையாளம் காணப்படுவதற்காக வைக்கப்பட்டுள்ளது.

படுகாயமுற்றோர் விவரம் வருமாறு:

1 செல்வி பே. பாமினி தேவி வயது 12,
2 செல்வி பே சுஜாதா வயது 8,
3 திருமதி க. சிவபாக்கியம் வயது 45,
4 செல்வி கே. இராஜமலர் வயது 25,
5 திருமதி பி அபிராமி சுந்தரி வயது 40,
6 செல்வி பி செல்வராணி வயது 22,
7 செல்வன். இராமகிருஷ்ணன் ரமணன் வயது 6,
8 செல்வி முத்துராசா விஜயகலா வயது 18,
9 செல்வி இராமகிருஷ்ணன் உஷாகார்த்திகா வயது 6,

படுகாயமுற்றோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அவசர சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்டனர். (அ-118)

தாளையடியில் இறங்க முயன்ற சிப்பாய்கள்

தாளையடி ஜூலை 1
தாளையடிப் பகுதிக் கடற்கரையில் இறங்க வந்த ஆயுதப்படையினர் போராளிகளின் எதிர்த் தாக்குதலினால் திரும்பிச் சென்றனர்

கடந்த வெள்ளிக் கிழமை இரவு இச் சம்பவம் நடந்தது.

கடற்படை ரோந்துப் படகு ஒன்றிலேயே தாளையடி கடற்கரையை நோக்கி சிப்பாய்கள் வந்தனர்.

அப்பகுதிக்கு வந்த போராளிகள் ரோந்துப் படகை நோக்கி தாக்குதலை ஆரம்பித்த போது படகு திரும்பிச் சென்றுவிட்டதாகக் கூறப்படுகிறது. (இ-144)

தொண்டமானாறு

(1ஆம்பக்கத்தொடர்ச்சி)
மில் இருந்தும் கடலில் இருந்தும் சக்தி வாய்ந்த பீரங்கிகளினால் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத் தாக்குதல்களின் போது, தொண்டமானாறு, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, வல்லைப் பகுதிகளில் ஷெல்கள் வந்து விழுந்தன.

ஷெல் தாக்குதல்களால் வல்வெட்டித் துறையில் ஒரு வீடும், உடுப்பிட்டியில் ஒரு வீடும் சேதமடைந்தன.

காயமடைந்தோர் விவரம் தெரியவரவில்லை. (இ-70)

31ம் நினைவு அஞ்சலி

மண்ணுலகம் :
24 - 9 - 1964
விண்ணுலகம் :
1 - 5 - 1986

இராசரத்தினம்
லோகராசா (லோகு)

அருமை நண்பனே
ஆருயிர்த் தோழனே
புன்முகங்கள் காட்டி
உத்தமனாய் வாழ்ந்து
நற் பெயர்கள்
பெற்றாய்
உனை மறக்க
உள்ளங்களும்
உண்டோ
எம் அருமை தோழா
பிரிவால் வாடும்

நண்பர்கள்
குடும்பத்தினர்
உடுப்பிட்டி